| விடயம் | அதிகூடிய புள்ளிகள் | விவரணம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. கல்வித் தகைமைகள் | 20 புள்ளிகள் | (i) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டப்பின் கற்கை சட்டமுதுமாணிப் பட்டம் (LLM) | 10 புள்ளிகள் |
| | | (ii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/ பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட குறித்த சட்டம் தொடர்பான பட்டப்பின் கற்கை டிப்ளோமா பட்டம். | 08 புள்ளிகள் |
| | | (iii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/ பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டமாணி பட்டம் (LLB) முதலாம் தர சித்தி. | 07 புள்ளிகள் |
| | | (iv) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/ பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டமாணி பட்டம் (LLB) இரண்டாம் தர மேல் நிலைச் சித்தி. | 06 புள்ளிகள் |
| | | (v) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/ பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டமாணி பட்டம் (LLB) இரண்டாம் தர கீழ் நிலைச் சித்தி. | 05 புள்ளிகள் |
| | | (vi) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி பரீட்சையில் முதலாம் தர சிறப்புச் சித்தி. | 07 புள்ளிகள் |
| | | (vii) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி பரீட்சையில் இரண்டாம் தர சிறப்புச் சித்தி. | 06 புள்ளிகள் |
| | | அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் என்பது சட்டக் கல்வி கூட்டு இணைவுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது ஓர் நிறுவனம். (மேலே கூறப்பட்ட அனைத்து தகைமைகளும் அதிகபட்சமாக 20 புள்ளிக்குள் அடங்கும்) | |
| | | மேல் கூறப்பட்ட கல்வித் தகைமைகள் சான்றுப் பத்திரங்கள் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும். | |
| 02. சட்டத்தரணி ஒருவராக பெற்றுக் கொண்டுள்ள தொழில்சார் அனுபவம் | 20 புள்ளிகள் | (i) வழக்கு நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தின் முன் தோன்றி கடமையாற்றிய திறமைகள். | 10 புள்ளிகள் |
| | | (ii) பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியாக அல்லது சட்ட ஆலோசகராக கடமையாற்றிய போது வெளிப்படுத்திய திறமைகள். (மேலே குறிப்பிடப்பட்ட திறமைகளுக்கான சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.) | 10 புள்ளிகள் |
| | | **குறிப்பு**:- நீதிபதி ஒருவரினால் தொழில் திறன் தொடர்பில் நற்சான்று பத்திரம் மற்றும் 20 வருடங்களுக்கு குறையாமல் பணியாற்றிய சட்டத்தரணிகள் இருவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட நற்சான்று பத்திரங்கள் என்பவை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரம் ஏற்புடையதாகாது. | |
| 03. விசேட திறமைகள் | 50 புள்ளிகள் | (i) தொடர்பாடல் திறமைகள் | 12.5 புள்ளிகள் |
| | | (ii) சந்தர்ப்பத்துக்கு ஏற்ற பேச்சுத்திறன் | 12.5 புள்ளிகள் |
| | | (iii) சபையின் முன் வெற்றிகரமாக தோற்றும் திறமை | 12.5 புள்ளிகள் |
| | | (iv) மொழியை கையாலும் திறமை | 12.5 புள்ளிகள் |
| 04. நேர்முகப் பரீட்சையின் போது காண்பிக்கும் திறமைகள் | 10 புள்ளிகள் | (i) ஆளுமை | 5 புள்ளிகள் |
| | | (ii) தலைமைத்துவ பண்புகள் | 5 புள்ளிகள் |

6. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**:-

சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும்.

